**பாடம் - 13**
**ஈமானும் அதன் அடிப்படைகளும்(தொடர்ச்சி)**

**الدرس الثالث عشر**
**تابع الإيمان وأركانه**

## 5.இறுதி நாளை நம்புவது

மரணத்திற்குப் பின்னர் நிகழுமென அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் அறிவித்துள்ள அனைத்து விஷயங்களையும் நம்புவது என்பது இறுதி நாளை நம்புவதில் அடங்கும். உதாரணமாக கப்ருடைய (மண்ணறையின்) சோதனை, அதன் வேதனை, அங்கு கிடைக்கும் இன்பம், மறுமை நாளில் ஏற்படுகின்ற அமளிகள், துன்பங்கள், பாலம், தராசு, கேள்வி கணக்கு, நற்கூலி, தண்டனை, மக்களுக்கு வினைப்பட்டியல்களைக் கொடுப்பது, அப்போது தமது வினைப் பட்டியலை வலது கையில் வாங்குவோர் இருப்பார்கள். தம் வினைப்பட்டியலை இடது கையில் அல்லது தமது முதுகுக்குப் பின்னால் வாங்குவோரும் இருப்பார்கள்.

இன்னும் நம்முடைய நபி முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் தடாகத்தை நம்புவதும் இதில் அடங்கும். நபிமொழியில் வந்துள்ளது போல ஒவ்வொரு நபிக்கும் தண்ணீர் தடாகம் உண்டு. மேலும் சொர்க்கம், நரகம், முஃமின்கள் அல்லாஹ்வைப் பார்ப்பது, அவர்களிடம் அல்லாஹ் பேசுவது ஆகியவற்றையும் மற்றும் குர்ஆனிலும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளிலும் வந்துள்ள இது தொடர்பான அனைத்து விவரங்களையும் நம்புவதும் இதில் அடங்கும். எனவே இவையனைத்தையும் அல்லாஹ்வும் அவன் தூதரும் விளக்கிய முறைப்படி நம்புவது கடமையாகும்.

## 6.விதியை நம்புவது

இதில் நான்கு விஷயங்கள் உள்ளன:

**1.**நிச்சயமாக அல்லாஹ் இதுவரை நடந்ததையும் இனி நடக்கவிருக்கின்ற வற்றையும் அறிந்துள்ளான். இன்னும் தன்னுடைய அடியார்களின் நிலைமைகள், அவர்களின் வாழ்வாதாதாரங்கள், ஆயுட்காலம், அவர்களின் செயல்கள் மற்றும் அவர்களுடைய இதர விஷயங்கள் அனைத்தையும் அவன் அறிந்துள்ளான். இதில் எதுவும் அல்லாஹ்வுக்கு மறைந்ததல்ல என நம்புவது.

﴿ إِنَّ اللهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ ﴾ ﴿التوبة:١١٥﴾

அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (9:115)

**2.**அவன் நிர்ணயித்துள்ள எல்லாவற்றையும் அவன் எழுதி வைத்துள்ளான் என நம்புவது.

﴿ وَكُلَّ شَيْءٍ أَحْصَيْنَاهُ فِي إِمَامٍ مُبِينٍ ﴾ ﴿يس:١٢﴾

அல்லாஹ் கூறுகிறான்: நாம் ஒவ்வொன்றையும் ஒரு தெளிவான பதிவேட்டில் வரையறுத்துள்ளோம். (36:12)

**3.**செயல்படுத்தப்படுகிற அவனது நாட்டத்தை நம்புவது. அல்லாஹ் நாடியது நடக்கின்றது. அவன் நாடாதது நடக்காது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ كَذَلِكَ اللهُ يَفْعَلُ مَا يَشَاءُ ﴾ ﴿آل عمران:٤٠﴾

அல்லாஹ், தான் நாடுகின்றவற்றைச் செய்வான். (3:40)

**4.**நிகழ்வதற்கு முன் நிர்ணயிக்கப்பட்ட (இவ்வுலகில் உலுள்ள அனைத் தையும்) அவனே படைத்துள்ளான் என நம்புவது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَاللهُ خَلَقَكُمْ وَمَا تَعْمَلُونَ ﴾ ﴿الصافات:٩٦﴾.

அல்லாஹ்வே உங்களையும் நீங்கள் செய்தவற்றையும் படைத்தான். (37:96)